# நிலம் பொது

## வினா - விடை

1. அமெரிக்கர்களின் வாழ்வையும், செவ்விந்தியர்களின் வாழ்வையும் ஒப்பிட்டுச் சியாட்டல் கூறுவது யாவை?

உங்கள் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை. இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை. மாறாக, சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன.

எம் மக்கள் தென்றலின் இன்னோசையையும், மழையால் எழும் மண்வாசனையையும், தேவதாரு இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.

நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை என்று சியாட்டல் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

2. காற்று குறித்துச் சியாட்டல் கூறுவன யாவை?

நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் அனைவருக்கும் சுவாசித்தல் பொதுவானது. பொதுவான காற்றையே இவையாவும் சுவாசிக்கின்றன. நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இந்தக் காற்றானது அனைத்துப் புது உயிர்களையும் காக்கிறது. இவ்வுணர்வுகளைச் சுமந்து நிற்கும் காற்றின் இன்றியமையாமையை, நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் நீங்கள் மறக்கவே கூடாது என்கிறார்.

3. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

- செவ்விந்தியர்கள் வாழும் பகுதியில் உள்ள எருமைகள் கொல்லப்படுவதையும்,

- எங்கு பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும்,
- தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும்

தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்.

4. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

- ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவை,
- இந்த நீரின் முணுமுணுப்புகள் எம்பாட்டன்மார்களின் குரல்களேயாகும்.
- இந்த ஆறுகள் எம் உடன் பிறந்தவர்கள். எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள்.
- தோணிகளையும் சுமந்து செல்கின்றனர்
- குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.
- இங்குள்ள ஓடை, ஆறுகளில் ஓடும் நீரானது வெறும் தண்ணீரன்று;
- எமது மூதாதையரின் குருதியாகும் என நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளார்.

5. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

- நறுமணம் மிகுந்த மலர்கள் எமது சகோதரிகள்.
- மான்கள், குதிரைகள், கழுகுகள் எமது சகோதரர்கள்.
- மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.

6. நிலவளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய பணிகள் யாவை?